முதல்முறையாக போர்க் கப்பலில்

# மிக்-29கே விமானம் இரவில் தரையிறக்கம்



ஐஎன்எஸ் விக்ராந்த் விமானம் தாங்கி போர்க்கப்பலில் முதல்முறையாக இரவு நேரத்தில் தரையிறங்கிய மிக்-29கே போர் விமானம்.

புது தில்லி, மே 25: இந்தியாவிலேயே கட்டமைக்கப்பட்ட ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பலில் மிக்-29 கே போர் விமானம் இரவில் தரையிறங்கி சாதனை படைத்துள்ளது.

மிகவும் சவாலான இரவு தரையிறக்கத்தை விக்ராந்த் மாலுமிகளும், விமானப் படை விமானிகளும் இணைந்து வெற்றிகரமாக செயல்படுத்தி வரலாற்றில் மைல் கல்லை பதித்துள்ளனர் என கடற்படை பெருமிதம் தெரிவித்துள்ளது.

அரேபிய கடலில் சென்று கொண்டிருந்த ஐஎன்எஸ் விக்ராந்த்தில் புதன்கிழமை இரவு இந்தச் சாதனை படைக்கப்பட்டது.

'இது கடற்படையின் தற்சார்பு கொள்கையை வெளிப்படுத்துகிறது' என்று கடற்படை செய்தித் தொடர்பாளர் கமாண்டர் விவேக் மாத்வால் தெரிவித்தார்.



இந்திய கடற்படையின் இந்தச் சாதனைக்கு பாராட்டு தெரிவித்துள்ள பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 'இது விக்ராந்த் போர்க் கப்பலின் அதிகாரிகள், விமானப் படை வீரர்கள் ஆகியோரின் திறனை வெளிப்படுத்துகிறது' என்று ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

ரஷியாவிடம் இருந்து வாங்கப்பட்ட மிக்-29கே போர் விமானமும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இலகு ரக தேஜஸ் போர் விமானமும் கடந்த பிப்ரவரி மாதம் பகல் நேரத்தில் விக்ராந்த் போர்க் கப்பலில் தரையிறக்கப்பட்டது.

முதல் முறையாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானம் தாங்கி போர்க் கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த்தை பிரதமர் மோடி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கி வைத்தார். 40 ஆயிரம் டன்னுக்கும் அதிகமான சுமையை சுமந்து செல்லும் கப்பல்களைக் கொண்ட ஒரு சில நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம்பெற்றது.

ரூ.23 ஆயிரம் கோடியில் உருவாக்கப்பட்ட விக்ராந்த்தில் வான் பாதுகாப்பு, கப்பல் எதிர்ப்பு ஏவுகணை அமைப்பு ஆகியவை இடம்பெற்றுள்ளன. 30 போர் விமானங்களும், ஹெலிகாப்டர்களும் நிறுத்தும் அளவுக்கு விக்ராந்த் போர்க் கப்பலில் இடம் உள்ளது.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவ ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பல் முக்கியப் பங்காற்றும் என்று கடற்படை தெரிவித்திருந்தது.

**INS Vikrant:**

EVA

- The INS Vikrant – the 44,000-tonne indigenous aircraft carrier (IAC) – is the first to be designed and constructed in India.
- After its induction, the warship will be a key component of the Indian Navy's push to establish itself as a "blue water" force, one with the ability to project its power on distant seas.

**Features:**

- The Vikrant stretches 262 metres in length, exceeding that of two football fields and is 62 metre wide. Around 20 aircraft can be parked in the hangar.
- It has a top speed of around 28 knots (more than 50 kmph) and a cruising speed of 18 knots with an endurance of about 7,500 nautical miles.
- Over 76 per cent of the material and equipment on board the carrier is indigenous, including 21,500 tonnes of special grade steel developed indigenously and used in Indian naval ships for the first time.
- This is the first time in the country that a ship of the size of an aircraft carrier is completely modelled in 3D and production drawings extracted from the 3D model.
- The Made-in-India warship is a feather in the country's cap, as only five or six nations have the capacity of building an aircraft carrier.

**It will be carrying:**

- The Russian-made MiG-29K fighter jet,
- Kamov-31 early warning helicopters,
- The indigenously manufactured Advanced Light Helicopters and
- The MH-60R multirole helicopter made by the American defence major Lockheed Martin.

**Why is it named Vikrant?**

- INS Vikrant was India's first aircraft carrier, which it acquired from the United Kingdom in 1961.
- It played a key role in the 1971 war with Pakistan which led to the creation of Bangladesh. It was decommissioned in 1997.

EVA STALIN IAS ACADEMY

- Now India’s first homemade aircraft carrier will carry the name of her illustrious predecessor.

**Other aircraft carriers:**

- The Indian Navy has only one operational aircraft carrier at present – the INS Vikramaditya.
- The country’s two earlier carriers, INS Vikrant and INS Viraat, were originally the British-built HMS Hercules and HMS Hermes before being commissioned into the Navy in 1961 and 1987 respectively.
- The commissioning of the warship, which will be christened ‘Vikrant’, will mark a “historical milestone of realisation of Nation’s commitment towards AatmaNirbharta” (self-reliance).

**ஐஎன்எஸ் விக்ராந்த்:**

- ஐஎன்எஸ் விக்ராந்த் - 44,000 டன் உள்நாட்டு விமானம் தாங்கி போர்க்கப்பல் (ஐஏசி) - இந்தியாவில் முதன்முதலில் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது.

- அதன் தூண்டலுக்குப் பிறகு, தொலைதூர கடல்களில் தனது சக்தியை வெளிப்படுத்தும் திறன் கொண்ட ஒரு "நீல நீர்" படையாக தன்னை நிலைநிறுத்துவதற்கான இந்திய கடற்படையின் உந்துதலின் முக்கிய அங்கமாக இந்த போர்க்கப்பல் இருக்கும்.

**அம்சங்கள்:**

- விக்ராந்த் 262 மீட்டர் நீளம், இரண்டு கால்பந்து மைதானங்களை விட 62 மீட்டர் அகலம் கொண்டது. ஹேங்கரில் சுமார் 20 விமானங்களை நிறுத்த முடியும்.

- இது சுமார் 28 நாட்ஸ் (50 கிமீக்கு மேல்) அதிகபட்ச வேகம் மற்றும் 7,500 கடல் மைல்கள் தாங்கும் திறன் கொண்ட 18 நாட் வேகம் கொண்டது.

EVA STALIN IAS ACADEMY

- 21,500 டன்கள் சிறப்பு தர எஃகு உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டு முதல் முறையாக இந்திய கடற்படைக் கப்பல்களில் பயன்படுத்தப்படும் 21,500 டன்கள் உட்பட, கப்பலில் உள்ள 76 சதவீதத்துக்கும் அதிகமான பொருட்கள் மற்றும் உபகரணங்களும் உள்நாட்டிலேயே உள்ளன.

- நாட்டிலேயே முதன்முறையாக விமானம் தாங்கி போர்க்கப்பலின் அளவுள்ள கப்பலை முழுமையாக 3டி வடிவில் வடிவமைத்து, 3டி மாடலில் இருந்து உற்பத்தி வரைபடங்கள் எடுக்கப்பட்டது.

- மேட்-இன்-இந்தியா போர்க்கப்பல் நாட்டின் ஐந்து அல்லது ஆறு நாடுகளுக்கு மட்டுமே விமானம் தாங்கி கப்பலை உருவாக்கும் திறன் உள்ளது.

**இது சுமந்து செல்லும் விமானங்கள்:**

- ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட MiG-29K போர் விமானம்,
- Kamov-31 முன் எச்சரிக்கை ஹெலிகாப்டர்கள்,
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர்கள் மற்றும்
- அமெரிக்க பாதுகாப்பு நிறுவனமான லாக்ஹீட் மார்ட்டின் தயாரித்த MH-60R மல்டிரோல் ஹெலிகாப்டர்.

**அதற்கு ஏன் விக்ராந்த் என்று பெயர்?**

- ஐஎன்எஸ் விக்ராந்த் இந்தியாவின் முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல் ஆகும், இது 1961 இல் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து வாங்கியது.
- 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடனான போரில் பங்களாதேஷ் உருவானதில் இது முக்கிய பங்கு வகித்தது. இது 1997 இல் நீக்கப்பட்டது.
- இப்போது இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட விமானம் தாங்கி கப்பல் அதன் புகழ்பெற்ற முன்னோடியின் பெயரைக் கொண்டிருக்கும்.

EVA STALIN IAS ACADEMY

**மற்ற விமானம் தாங்கிகள்:**

- இந்திய கடற்படையிடம் தற்போது ஒரே ஒரு விமானம் தாங்கி போர்க்கப்பல் மட்டுமே உள்ளது - ஐஎன்எஸ் விக்ரமாதித்யா.
- நாட்டின் இரண்டு முந்தைய கேரியர்களான ஐஎன்எஸ் விக்ராந்த் மற்றும் ஐஎன்எஸ் விராத் ஆகியவை, 1961 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளில் முறையே கடற்படையில் பணியமர்த்தப்படுவதற்கு முன்பு, பிரிட்டிஷ் கட்டமைக்கப்பட்ட HMS ஹெர்குலிஸ் மற்றும் HMS ஹெர்ம்ஸ் ஆகும்.
- 'விக்ராந்த்' எனப் பெயரிடப்படும் இந்தப் போர்க்கப்பலின் பணியமர்த்தல், "ஆத்ம நிர்பர்தா" (தன்னம்பிக்கை) மீதான தேசத்தின் உறுதிப்பாட்டை உணர்ந்துகொள்ளும் வரலாற்று மைல்கல்லைக் குறிக்கும்.

EVA STALIN IAS ACADEMY

# லண்டன் கண்காட்சியில் கோஹினூர் வைரம்

**லண்டன், மே 25:** பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடைபெறவுள்ள கண்காட்சியில் கோஹினூர் வைரம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் அரசராக மூன்றாம் சார்லஸும் அரசியாக அவரின் மனைவி கமீலாவும் அண்மையில் முடிசூட்டப்பட்டனர். பிரிட்டன் அரசிகளுக்கான கிரீடத்தில் கோஹினூர் வைரம் பதிக்கப்பட்டுள்ளது.

அந்த வைரமானது இந்தியாவில் இருந்து வெட்டி எடுக்கப்பட்டதாகும். 1849-இல் பஞ்சாப் சமஸ்தான அரசர் அப்போதைய பிரிட்டன் சாம்ராஜ்ய மகாராணியிடம் அளித்தார். பல சாம்ராஜ்யங்களுக்கு இடையே கைமாறிய கோஹினூர் வைரமானது இறுதியாக பிரிட்டன் அரச வம்சத்தினரிடம் சென்றடைந்தது.

கோஹினூர் வைரத்துக்கு இந்தியா தொடர்ந்து உரிமை கோரி வருகிறது. அந்த வைரத்தைபிரிட்டன் அரசிடமிருந்துதிரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டுமெனப் பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். எனினும், கோஹினூர் வைரத்தை பிரிட்டனிடமிருந்து திரும்பப் பெறும் எண்ணம் இல்லை என மத்திய அரசு அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், லண்டனில் நடைபெறவுள்ள கண்காட்சியில்கோஹினூர் வைரம் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வைரம் பல சாம்ராஜ்யங்களுக்கு இடையே கைமாறியது தொடர்பான வரலாற்றுத் தகவலும் காணொலியாக இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





லண்டனில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கோஹினூர் வைரம்.
(வலது) கோஹினூர் வைரம் பதிக்கப்பட்ட கிரீடம்.

இது தொடர்பாக, பிரிட்டன் மாளிகைகளை நிர்வகித்து வரும் 'ஹிஸ்டாரிக் ராயல் பேலசஸ்' அறக்கட்டளையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 'கோஹினூர் வைரம் உள்ளிட்ட பிரிட்டன் அரச குடும்பத்தினரிடம் உள்ள பல்வேறு பொருள்களின் வரலாற்றுத் தகவல்கள் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

போர் வெற்றியின் அடையாளமாகத் திகழும் கோஹினூர் வைரமானது, முகலாயர்கள், ஈரானின் ஷா ஆட்சியாளர்கள், ஆப்கனின் எமீரர்கள், சீக்கிய மகாராஜாக்கள் எனப் பல சாம்ராஜ்யங்கள் வழியே கைமாறியுள்ளது. இது தொடர்பாக வரலாற்று ஆசிரியர்கள் உள்ளிட்டோரிடம் விரிவான தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

வரலாற்றை வெளிப்படையாகவும் சமநிலையுடனும் ஒருங்கிணைப்புத்தன்மையுடனும் வெளிக்காட்டும் வகையில் இந்தக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1849-ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி பஞ்சாப் மகாராஜா துலீப் சிங், பஞ்சாபையும் கோஹினூர் வைரத்தையும் பிரிட்டன் சாம்ராஜ்ய மகாராணி விக்டோரியாவிடம் ஒப்படைக்க நேர்ந்தது. 1852-ஆம் ஆண்டில் பிரிட்டன் பாரம்பரியத்துக்கு ஏற்ப வைரம் பட்டை தீட்டப்பட்டது.

அப்போதுமுதல் அரசர்கள் /அரசிகளின் கிரீடத்தில் கோஹினூர் வைரம் பொருத்தப்பட்டு வந்தது. அதன் பிறகு வைரத்தின் மாதிரியே கிரீடத்தில் பொருத்தப்பட்டு வருகிறது' என்றார்.

வரும் நவம்பர் வரை இந்தக் கண்காட்சி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# 2024–ஆம் ஆண்டுக்கான பிரதமரின் தேசிய சிறார் விருதுகள்

## ஜூலை 31 வரை விண்ணப்பங்கள் ஏற்பு

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி மே 25:** பிரதமரின் 2024 – ஆம் ஆண்டுக்கான தேசிய சிறார் விருதுகளுக்கான (ராஷ்ட்ரீய பால புரஸ்கார் விருது) விண்ணப்பங்களை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் கோரியுள்ளது.

இந்த விண்ணப்பங்களுக்கான கடைசி தேதி வரும் ஜூலை 31 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அசாதாரணமான திறன் கொண்ட சிறார்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கும் விதமாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஒவ்வோர் ஆண்டும் கௌரவமிக்க பிரதமரின் தேசிய சிறார் விருதுகளை வழங்கி வருகிறது.

புத்தாக்கம், சமூக சேவை, கல்வி மற்றும் சுற்றுச்சூழல், விளையாட்டு, கலை மற்றும் கலாசாரம், வீரதீரச் செயல் என ஆறு பிரிவுகளில் தேர்வு செய்யப்படுகின்றனர். இந்த துறைகளில் மிகச் சிறப்பான சாதனை படைத்த 5 வயது முதல் 18 வயதுடைய குழந்தைகளுக்கு மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் சார்பில், பிரதமரின் தேசிய சிறார் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரியில் குடியரசு தின விழாவை யொட்டி, சிறப்பு நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவரால் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசு, பதக்கம், சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்ட இந்த விருதுகளுக்கு 18 வயதுக்குள்பட்ட (விண்ணப்பங்கள் பெறும் கடைசி தேதி நிலவரப்படி) இந்தியக் குடிமகனாக இருக்கும் சிறார் அல்லது சிறார் சார்பில் எவரும் இந்த விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காகவே வடிவமைக்கப்பட்ட https://awards.gov.in எனும் இணையப்பக்கத்தின் மூலமாக மட்டுமே இந்த விருதுகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்படும் என மத்திய அரசு தெரிவித்தள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் பெறுவதற்கான கடைசி நாள் வரும் (2023 ஆம் ஆண்டு) ஜூலை 31 – ஆம் தேதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

EVA

# பழங்குடியின கலாசார அடையாளம் பாதுகாக்கப்படுவது அவசியம்

## குடியரசுத் தலைவர் முர்மு



ஜார்க்கண்ட் மாநிலம் குந்தியில் பழங்குடியின பெண்கள் சுய உதவி திட்ட நிகழ்ச்சியில் பங்கேற்ற குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு நினைவுப் பரிசு வழங்கிய ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன். உடன், மாநில முதல்வர் ஹேமந்த் சோரன்.

**குந்தி, மே 25:** பழங்குடியினரின் கலாசார அடையாளம் பாதுகாக்கப்படுவது அவசியம் என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களை பழங்குடியினப் பெண்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் 3 நாள் சுற்றுப்பயணம்மேற்கொண்டுள்ள திரௌபதி முர்மு, குந்தி நகரில் பழங்குடியினப் பெண்களின் சுய உதவிக் குழு உறுப்பினர்களைச் சந்தித்து வியாழக்கிழமை உரையாடினார். அப்போது அவர் பேசியதாவது:

ஜார்க்கண்டைச் சேர்ந்த பழங்குடியினப் பெண்கள் பலர் விளையாட்டுத் துறையில் சிறப்பான சாதனைகளைப் படைத்து வருகின்றனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் ஜார்க்கண்ட் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது.

பழங்குடியினப் பெண்களுக்காக மத்திய, மாநில அரசுகள் நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பெண்கள் முன்னேற்றம் என்று வந்தால் ஜார்க்கண்டைச் சேர்ந்த பழங்குடியினப் பெண்கள் மற்றவர்களை விட முன்னணியில் இருக்க வேண்டும். பழங்குடியின கலாசாரத்தை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும்.

இப்போதைய சமுதாயத்துக்கு பழங்குடியின கலாசாரம் பல வழிகளில் முன்னுதாரணமாகவும் திகழ்கிறது. அதில் முக்கியமானது பழங்குடியின கலாசாரத்தில் வரதட்சிணை என்ற நடைமுறை கிடையாது. ஆனால், இன்று படித்த நாகரிகமான மக்கள் கூட வரதட்சிணை முறையை தொடர்ந்து கடைப்பிடிக்கின்றனர் என்றார்.

பிர்சா முண்டா கல்லூரியின் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 25,000-க்கும் மேற்பட்ட பழங்குடியினப் பெண்கள் பங்கேற்றனர். பழங்குடியினரின் தயாரிப்புகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 20-க்கும் மேற்பட்ட கடைகளையும் திரௌபதி முர்மு பார்வையிட்டார். பழங்குடியினரின் பல்வேறு கைவினைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பழங்குடியினரின் பாரம்பரிய நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.